# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.43-2019

Deposition of witness No. for Prosecution / Defence / Court

Name :திரு.வேலு அ.சா.1 LW.1

Father's Name : காசி

Village : வீடு கிராமம்,

Taluk : திண்டிவனம் தாலுக்கா

Caste :

Calling :

Religion :

Age : 37

Time : 4.43 pm - 5.04 pm

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 24th day November 2021.
24.11.2021
முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நானும் என் மனைவியும் கூலி வேலை செய்து வந்தோம். வெற்றி ஜுவல்லர்ஸ்சில் 6 பவுன் நகை எடுத்து வந்தோம். என் மனைவி சத்துணவு வேலையில் சேருவதற்காக 6 பவுன் நகையை முத்து பைனான்சில் அடகு வைக்க சொல்லி ஆஜர் 1வது எதிரி கோவிந்தராஜிடம் கொடுத்துவிட்டு 3ம் தேதி வீட்டிற்கு வந்துவிட்டார். என் மனைவி பெயர் ரெஜினா. என் மனைவி இறக்கும்போது சுமார் 30 வயது இருக்கும். அதன்பிறகு 11ம் தேதி காலை 8 மணிக்கு நான் வேலைக்கு கிளம்பினேன், அப்போது என் மனைவி என்னிடம் நான் கோவிந்தராஜை பார்த்துவிட்டு பணம் வாங்கி வருகிறேன் என்றும் வேலைக்கு கேட்கிறார்கள் என்று சொன்னார். நானும் சரிபோய் வாங்கிட்டு வா என்று சொல்லிவிட்டு வேலைக்கு போய்விட்டேன். அன்று சாயந்திரம் வீட்டிற்கு வந்தபோது, பக்கத்து

வீட்டிலிருந்த தனலட்சுமியிடம், நான் என்னுடைய நகையை கோவிந்தராஜிடம் கொடுத்து பணம்வாங்கி வரப்போகிறேன், என் கணவரிடம் சொல்லு என்று தனலட்சுமியிடம் சொல்லவிட்டு போய் இருக்கிறார். நான் வீடடிற்கு வந்தவுடனே தனலட்சுமி என்னிடம், நீ வந்தால் உன் மனைவி கூறச்சொன்னார் என்று சொன்னார். என் மனைவி ஆரஞ்சு கலர் புடவை, ஆரஞ்சு கலர் ஜாக்கெட், ஒரு தாமரை போட்ட டாலர் செயினை வாங்கி போட்டுக்கிட்டு போனார் என்று தனலட்சுமி என்னிடம் சொன்னார். அதன்பிறகு என் மனைவி வீட்டிற்கு வரவே இல்லை. அதன்பிறகு மறுநாள் வேம்பூண்டிக்கு போய் கோவிந்தராஜிடம் போய் நான்கேட்டேன். என் மனைவி வந்தாளாமே, நகை அடகு வச்சிட்டு பணம் கேட்டாளாமே, நீ நகையை அடகு வச்சிட்டு பணம் கொடுத்தாயா என்று கேட்டேன். அதற்கு அவர் நகையை நான் வாங்கவே இல்லை, வைக்கவே இல்லை, உன் மனைவியை பார்க்கவே இல்லை என்று பதில் சொல்லிவிட்டார். என்னடா இது நம்ம சொந்தக்காரப்பையனாக இருந்துகிட்டு தப்பா பேசுகிறானே என்று நினைத்துக்கொண்டு வீட்டிற்கு போய்விட்டேன். அதன்பிறகு என் சொந்தக்காரர்கள் வீட்டிறகு போய் தேட ஆரம்பித்தேன். எந்த ஒரு பதிலும் கிடைக்கவில்லை, தகலும் கிடைக்கவில்லை. அதன்பிறகு நான் தேடிக்கொண்டிருந்தபோது, விக்கிரவாண்டி பஸ் நிலையத்தில், ரோஷனை போலீசார்கள் போஸ்ட்டர் அடித்து ஒட்டி வைத்திருந்தார்கள். அடையாளம் தெரியாத ஒரு பெண் பிரேதம் இருப்பதாகவும், அந்த ஆரஞ்சு புடவை, ஜாக்கெட், கிளிப் எல்லாவற்றையும் போட்டு போஸ்ட்டர் அடித்து ஒட்டியிருந்தார்கள். அந்த போஸ்ட்டரை நான் பார்த்துவிட்டு, அது என் மனைவி போல இருக்கிறது என்று தனலட்சுமி, சரோஜா மற்றும் என் ஊர்க்காரர்களிடம் சொல்லி வரவழைத்தேன். தனலட்சுமியிடம் இந்த புடவை ஜாக்கெட் என் மனைவி போட்டிருந்ததா என்று கேட்டேன். ஆமாம், உன் மனைவி போட்டிருந்தது தான் என்று சொன்னார். இந்த டாலர் என்னிடம் வாங்கி போட்டுச்சென்ற டாலர் தான் என்று சொன்னார். அதன்பிறகு ரோஷனை காவல்நிலையத்திற்கு போய் ஆய்வாளரிடம் சொன்னோம். அவர் உடனே எங்களை முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அதன்பிறகு என் மச்சான் முருகன் மற்றும் ஆறுமுகத்திற்கு சொல்லி வரவழைத்தேன். நாங்கள் போய் பிரேதத்தை பார்த்தோம். பிரேதத்தை காண்பித்தார்கள். பிரேதத்தின் மீது போடப்பட்டிருந்த புடவை என் மனைவியின் புடவை. அது என் மச்சான் முருகன், அவருடைய கல்யாணத்தின்போது எடுத்துக்கொடுத்த புடவை. என் மச்சானும் இந்த புடவையை நான் தான் கல்யாணத்திற்கு எடுத்து கொடுத்தேன் என்று சொன்னார். தனலட்சுமியும், என்னிடம் வாங்கி போட்டு போன டாலர் இது தான் என்று சொன்னார்கள். அதன்பிறகு ஆய்வாளரிடம் இது என் மனைவி தான் என்று உறுதியாக அடையாளம் காட்டினேன். 24ம் தேதி காவல்நிலையத்திற்கு வரச்சொன்னார்கள். என் மனைவி போட்டிருந்த நகைகளை எல்லாம் காணோம் என்று போலீசிடம் சொன்னேன். கம்மல், தாலி, குண்டு, நாணல், தோடு, மூக்குத்தி ஆகியவை காணவில்லை என்று சொன்னேன். அதன்பிறகு ஆய்வாளர் என்னை

விசாரணை செய்தார். அப்போது கோவிந்தராஜ் மீது எனக்கு சந்தேகமாக இருக்கிறது, பணத்திற்காக கொலை செய்துள்ளார் என்று சந்தேகத்தை சொன்னேன். அதன்பிறகு 24ம் தேதி முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு அழைத்து சென்று போஸ்ட்மார்டம் முடிந்துவிட்டது, நீ பிரேதத்தை எடுத்து செல்லலாம் என்று சொன்னார்கள். நான் பிரேதத்தை வாங்கி வந்து எங்களுடைய மத சடங்குப்படி எரித்துவிட்டேன். அதன்பிறகு என் அண்ணன் பொன்ன கேரளாவிற்கு வேலைக்கு போய்விட்டு வந்தார். வந்து என்ன நடந்தது என்று கேட்டார். நான் நடந்ததை கூறினேன். அதற்கு அவர் 11.11.2017ம் தேதி சாயந்திரம் நான் கேரளாவிற்கு வேலைக்கு போக பஸ் ஏற போனபோது உன் மனைவி பஸ்டேண்டில் நின்றுகொண்டிருந்தார் என்றும், நான் கேட்டபோது, அப்போது என் மனைவி நகையை அடகு வைத்து பணம் தர சொன்னேன், அதனால் அவருக்காக நான் காத்துக்கொண்டு நின்றுகொண்டிருக்கிறேன் என்று கூறியதாக என் அண்ணன் சொன்னார். அதன்பிறகு என் அண்ணன் பக்கத்து கடையில் டீ குடித்து கொண்டிருந்ததாகவும், அப்போது கோவிந்தராஜ் வெள்ளை இண்டிகா காரில் வந்து என் மனைவியை அழைத்து சென்றதை என் அண்ணன் பொன்னன் பார்த்திருக்கிறார். என் அண்ணன்கேரளாவிலிருந்து வந்து, நான் பிரேதத்தை எரித்தபிறகு இந்த விவரங்களை என்னிடம் சொன்னார். உறவினருடன் போனதால் நான் தப்பாக நினைக்கவில்லை என்று என் அண்ணன் சொன்னார். அதன்பிறகு நான் போலீசிடம் கடைசியாக கோவிந்தராஜ் அழைத்து சென்றதாக சொன்னேன். அதன்பிறகு 26ம் தேதி என்னை காவல்நிலையத்திற்கு அழைத்தார்கள். நான் போனபோது, கோவிந்தராஜையும், அவருடன் இருந்த 3 நபர்களும் அங்கு இருந்தார்கள். ஆய்வாளர் என்னிடம் தோடு, கம்மல், மூக்குத்தி, குண்டு, நாணல் ஆகியவற்றை காட்டினார். நான் அவற்றை எனது மனைவியுடையது தான் என்று கூறிவிட்டு நான் வந்தேன்.

<u>நகைகள் குறியீடு செய்வதற்காகவும், முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா நாளை ஒத்திவைக்கப்படுகிறது.</u>